உ

கணபதி துணை.

திருக்கைலாசபரம்பரைப்

பொம்மபுரம்

ஸ்ரீ சிவஞானபாலையதேசிகராதீனத்து

நல்லாற்றூர் அல்லது துறைமங்கலம்

**சிவப்பிரகாசசுவாமிகள்**

அருளிச்செய்த

# இஷ்டலிங்கவபிஷேகமாலை

## முதலிய பிரபந்தங்கள்.

---

இவை

ஷை ஆதீனத்துச் சிதம்பரம்

ஈசானியமடம்

**இராமலிங்கசுவாமிகளால்**

பரிசோதிக்கப்பட்டு,

---


சென்னை:

கலாரத்நாகர யந்திரசாலையில்

அச்சிற் பதிப்பிக்கப்பட்டன.

---

குரோதிஸு துலாரவி.

1904.

சிவமயம்.

| | | |
|---|---|---|
| க. | அபிஷேகமாலை. | விலை அணா-க. |
| உ. | நெடுங்கழிநெடில். | |
| ௩. | குறுங்கழிநெடில். | |
| ச. | நிரஞ்சனமாலை. | |
| ரு. | கைத்தலமாலை. | |
| சா. | சிவநாமமகிமை. | |

---

இஷ்டலிங்கவகவல் விலை அணா ௨
இவ்வேழுஞ்சேர்ந்தது ,, க௨

---

அபிஷேகமாலையும் நிரஞ்சனமாலையும் முற்றும் சாத்திரக்கருத்தமைந்தனவாயிருத்தலின் அவ்விரண்டும் தனியே உரையுடன் விரைவில் வெளிப்படுத்தப்படும்.

---

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# இஷ்டலிங்கவபிஷேகமாலை.

## பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பந்தமறு மரர்மிருடர் பவருருத் திரர்களொரு பதினொ ருவர் மிளிர்பீடமேற், படியிலை யையவகைப் படுமீசர் தாநிதம் பத்திலெண் வித்தையிறைவர்,—சந்தமுறு கோமுகத் தைங்க லைகள் சத்திசா தாக்கியம் மூர்த்திவதனந், தட்டற்ற வட்டத்தி லொட்டற்றசிற்சத்தி தாளுற்ற நாளத்திலே,—நந்தலற வருகோ ள கந்திகழ் சிதம்பர நற்சிகையி னிற்சூனிய, நட்டமற வமை கின்ற விட்டவடி வொடுநின்ற ஞானமய மோனநடுவோ,— டந்தமற முந்துபர மானந்த நீந்த வபிடேக மாடியருளே, யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற்ற மர்ந்தவிறை யபிடேக மாடியருளே. (க)

நாடரிய சத்தியோ சாதத்தும் வாமத்து நன்று மகோரத் தினு, நவையற்ற புருடத்து மாகமமொ ரைவ்வைந்து நல்கியீ சானத்திலே,—பீடுதரு மெட்டுமுறை தந்தவற் றிடைநீசொல் பெருமைபெறு மருமைவிதியிற், பேசரிய பூசைசிவ கோசரி யெனப்புரிதல் பெற்றிலேன் மற்றடியனேன்,— வேடுவர்கு லத்தலைவன் மெய்யன்பு பூண்டிலேன் வேட்டொருவர் மாட் டருளினுன், மீக்கொளொரு புடையொப்பு நோக்கிவைத் தனை சாற்றின் வேண்டல்வேண் டாமையிலையா,— லாடுநின் பால்

---

(க) சிவலிங்கமே எவ்வுகைமூர்த்திகளுக்கும் மூலமென்பது.

வேறு பாடொன்றி லாமையா லபிடேக மாடியருளே, யறிவுற்
றெ னங்கைமலர் செறிவுற்ற மர்ந்தவிறை யபிடேக மாடிய
ருளே. (உ)

நவிற்றலரு மிதயமிளிர் கண்டநா வடிபுருவ நடுவுயிர மப்டு
ழையெனு, நல்லிடத் தகராதி கிரியாதி மனமுதல நண்ணிடு
மைம்மூவகை,—யிவற்றிலொவ் வொன்றகல நின்றவிட யங்க
ளெதிர் வின்றிச்சி வாகாரமா, யெதிருநன வுஞ்சோக மென்
றுபா வித்தலுறு மென்கனவு ஞா துருவொடே,— யுவப்பறிவு
ஞேயமென வுற்றனுப வித்திடு மொண்சுழுத் தியுஞானமே,
யொளிர்துரிய முந்தினைத் துயர்சிவா னந்தநுகர் வுறுமதீ த
முமாகுநல்,— லவத்தைகள் கடந்தவற் றப்புறப் படுமமல னபி
டேக மாடியருளே, யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற்ற மர்ந்த
விறை யபிடேக மாடியருளே. (ங)

ஒருவனோர் பொருளிலாற் குற்றுதவி னுளம்வியந் தோகை
பெறு மன்றியுடைமை, யுதவுறு வமையத்தி லுதவினுந் தன்னி
டத் துள்ளதிற் பெரிதளிக்கும்,— பொருளதா யினுமதனி
னினியதா யினுமவன் புந்திமகிழ் வுற்றிடுவனால், புனல்விடுத்
திடுமுடியி னிற்புனரி யிற்பெருகு புண்ணியத் தெய்வநதிதா
ன்,— மருவலா னீர்விருப் பிலைநினக் கொருதிவலை மற்றென்
முடி யிற்றெறிப்பின், வைப்பன்வா னத்தினென வெத்திறத்
தானுநினை மக்கணினை வுற்றுய்ந்திட,— வருளினன் முனம்வி
தித் தவனுத லான்மகிழ்ந் தபிடேக மாடியருளே, யறிவுற்றெ
னங்கைமலர் செறிவுற்ற மர்ந்தவிறை யபிடேக மாடியருளே.()

---

(உ.) ஆகமோற்பவவகைகளும், அவற்றில்விதிக்கப்படும் விதிமார்க்கம் பத்திமார்க்கம் இரண்டானும் முத்தியுண்டென்பதும் விளக்கியது. (ங) நின்மலபஞ்சாவத்தையினியல்பும், சிவம் அவற்றிற்கும் அதீதப்பட்டதென்பதும் கூறியது.

(ச) பெருமானுக்கு ஒன்றினும் விழைவில்லையாகவும் ஆன்மாக்களுய்வான் ஆகமங்களில் ஆராதனைவிதித்தது.

கருகிச்சி வந்தகடு வருகிப்பொ ருந்தமிளிர் களம்வாழ்வு மேவவணிவாய், கடலிற்சி றந்தநிற வுடலிற்றி ருந்துமணி கதிர்போல வேயுநெடுமா,—லொருகட்கி சைந்தவடி யிருகட்கி ணங்கவற முடையார்மு ஞேடிவருவா, யுலகத்தை வென்றமனமிலகுற்ற மன்றினிடை யுமைகாண வாடல்புரிவாய்,— மருகற்பெ ரும்பதியி லொருகற்ப ணங்குதொழ மணவாள ஞவியுதவா, மயிலைக்க ணென்பினுயிர் பயில்வுற்றெ ழுந்துவர வருவாயெ ஞுமுனழையா,— வருகர்க்க ணங்குதரு முருகர்க்கு கந்தவர னபிடேக மாடியருளே, யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற்ற மர்ந்தவிறை யபிடேக மாடியருளே. (௫)

ஓகைமலி குருவாணை யுறுவிக்கு மாணையு முயர்புரா தனசரிதமோ, டொக்குநடை வருவிக்கு முவமையுந் தன்மகனை யொண்சுவத் திகமேற்றுபு,— சோகமறு மனுமயஞ் செய்தமைத்திடுமொரு சுவத்திகா ரோகணமுநூல், சொல்லிய விடங்களிற்றூயநீ றணிதருந் தொல்விபூ திப்பட்டமு,—மாகலச நீராட்டு கலசாபி டேகமு மருவுசிவ நோக்குவிக்கும், வயங்குலிங் காயதமு மன்னுசிவ லிங்கமுரு வனைசுவா யதமுமெனுமே, — ழாகுநெறி தான்மருவி யாகமிசை யிலகுமர னபிடேக மாடியருளே, யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற்ற மர்ந்தவிறை யபிடேக மாடியருளே. (௬)

போயகுல மொடுசரண ரொடுமேவு சமயமும் பொன்றலைகும் விட்டமலனுர், பூசனைகொ ளரியநிர்ச் சஞ்சார முங்கொடிய பொன்பெண்மண் ணுசைநெறியிற்,—பாயமன மோடாதிட்பிரா ணமுமெய்ம்முப் பத்தாறு தத்துவமறப், பகுதியொடு ணர்த்துதத் துவமுமிறை யஞ்சனீ பாரென்னு மான்மிகமுமே,— மேயசடு லிங்கமுட ஞறங்க மாகுமொரு மெய்யனுக்

(௫) பெருமான் அனுக்கிரக நிக்கிரகவியல்பு.

(௬) வீரசாமானியருக்குத் தூலதனுவிற்செய்யப்படும் இஷ்டலிங்க எழுவகைத்தீக்ஷை.

கிரகநிலையும், விமலமுறு சச்சிதா னந்தசிவ மயமென்னு மிக்கசத் தியசுத்தமு,—மாயவெழு வகைநெறியி னுவியிடை யிலகுமர னபிடேக மாடியருளே, யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற்ற மார்ந்தவிறை யபிடேக மாடியருளே. (எ)

தீட்சைத்தசிவ லிங்கமன் றுணராத வேகாக் கிரசித்த மென்னும்விரதங், கெடாததிட விரதம்விட யங்கள்சிவ னுக்குதவுகின்றவிக் கிரியார்ப்பித, — முடற்றியுயிர் கொன்றிடா நின்றிடு மகிஞ்சைசிவ னுண்மைகொ ளிலிங்கநிசமே, யுயர்சிவத்துளமடங் குறுமனோ லயமந்தனி லொன்றாகி நின்றபேதம்,—விடுத்தலுறு சத்தியோன் முத்தியெனு மிவையேழு மிக்ககுருவருள்புரியவே, மேவலரு மெய்ஞ்ஞான பாவநிலை மேவியிடும் வேதமுடி யாவுமுணரா,— தடுத்தமன மொழியுடற் கப்புறப்படுமமல னபிடேக மாடியருளே, யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற்ற மார்ந்தவிறை யபிடேக மாடியருளே. (அ)

நல்லதில நெய்யாடி யானிடத் தைந்தாடி நவையிலை யமுதமாடி, நல்குகா ரணகாரி யம்முறையி னன்றியே நறுநெய்பாறயிராடியே, — மெல்லமலர் மதுவாடி யின்கழைச் சாறுடிமென்பழச் சாறுடியே, விழையுமிள நீராடி யாரக்கு ழம்பாடி விதியினமை நபனமாடி,— யொல்லைநகு வெண்டலைப் புழையினிடை யோடிநல் லூத்திகொடு பைத்ததலைய, வுரகநுழைவுறவிளங் குழவிமதி யொருபுடை யொதுங்கவிட மின்றியசைய,— வல்லலற நிறைகங்கை யசையாது நிற்பைநீ யபிடேகமாடியருளே, யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற்ற மார்ந்தவிறை யபிடேக மாடியருளே. (கூ)

---

(எ) வீரவிசேடருக்குச் சூக்குமதனுவிற் செய்யப்படும் பிராணலிங்க எழுவகைத்தீக்ஷை.

(அ) வீரநிராபாரருக்குக் காரணதனுவிற் செய்யப்படும் பாவலிங்க எழுவகைத்தீக்ஷை.

(கூ) அபிஷேகங் கொள்ளுமுறைமை.

நரர்கடமி னரசரவர் தமினினிய திவவியாழ் நண்ணுநர கந் தருவர்தா, நவிலுமவர் தமினமர கந்தருவ ரவர்தம்மி னுடரிய தேவரவரிற்,—சுராதிப னவனினுயர் சுரர்குரவ னவனினயன் சொன்முறையி னாறுமடிமேற், றுன்னுசுக மொருதிவலை யள வுமின் முகமிகு சுகவேலை புகலீகுவாய்,— தரைமுதற் பூதங் கள் புத்திகுண தத்துவந் தகுதிபெறு பகுதிபுருட, தத்துவம் வித்தைமுத லனவெனுமி வற்றிலுறு சமயரென வெமைவி டாமம, — லருளினினை யடைதலுறு மரியபத மருளுமவ னபி டேக மாடியருளே, யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற்ற மர்ந் தவிறை யபிடேக மாடியருளே. (௧0)

அபிஷேகமாலை முற்றிற்று.

---

# நெடுங்கழிநெடில்.

## பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பெருகுறு மன்பாற் பூசனை புரிந்த பிணங்குநூற் சிலம்பி வெவ் வரவம், பிறைமருப் புறற்கால் யானையென் றிவற்றின் பிறவியோ விதழ்முறுக் கவிழ்ந்து,— முருகுமிழ் நறுமென் மலர்புனைந் தன்னை முற்றும்வந் தனைபுரி யாமன், முகிழ்முலை மகளிர் மயலிடை யழுந்து மூடர்தம் பிறவியோ நல்ல,— திரைபொருங் கங்கை யுவட்டெடுத் தொழுகுஞ் செஞ்சடை மிசையொரு துளிநீர், தெறித்தவர் தமையு நறவுகொப் பளிக் குஞ் செழுமலர்க் கற்பக வேந்து, — மெரிபுரை யிதழ்ச்செங்

---

(௧0) சிவாநந்தத்தினுயர்வும் சைவவருணைநிச்சிறப்பும்.

(௧) எப்பிறவி நல்லனவென வினாதற்கணின்ற ஓகாரமிரண் டனுள் முன்னையது அர்ச்சனைபுரிந்த சிலம்பியாதியவற்றினுயர் பும், பின்னையது அதுபுரியாத மூடரினிழிபும் தோன்றநின்றன. தெறித்தவர்தமையும் வைத்தருள்வோயென இயையும்.

கமலநான் முகனு மெய்தரும் பதத்தில்வைத் தருள்வோ, யிட் டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. ()

கட்டழ கமைந்து காளையம் பருவங் கடந்திடா துள்வலி யுடைத்துக், கலங்கல்செய் பிணியின் றியன்றயாக் கையராய்க் கல்வியங் கடல்கடந் தவராய்,— நட்டவர் விரும்பு மாறுநீ செய்ய நடக்குநா ளுடல்வெறுத் துனையே, நம்பியா ரூரன் முதலியோர் நண்ண நானுடல் விடுமென வழிவேன்,— பட்டி ருள் விழுங்க வலர்கதி ரவனும் பனிமதி யோடுயிர்த் தொகை யும், பார்புனல் சுடுதீ வளிவிசும் பென்னப் பட்டவைம் பூதமு மாகு,—மெட்டுரு வடைந்து முருவமொன் றின்றி யிற்றென வுணர்வரும் பொருளே, யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (௨)

மனமெனும் வயமா வென்வயப் படாமன் மயங்குறு மைம் புல வீதி, மறிபடா தோடு கின்றது முறையோ மறித்ததை நிறுத்தியென் றனக்கு,— நினையல துதவு வாரிலை யதனு னினைப்பர வுற்றன னதனை, நிறுத்திநீ யிவர்ந்து பின்னர்நீ வேண்டு நெறிகளிற் சென்றிட விடுவாய்,—கனலுறு மெழுகி னெஞ்சநெக் குடைந்து கரையில்பே ரன்பெனும் வெள்ளங், கண்வழி புறப்பட் டென்னநீர் வாரக் காலங்க டொறும்வழு வாமம,—வினமலர் தூவு மடியவ ருள்ளத் திருள்கெட வெழுந் தபே ரொளியே, யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு மீச னே மாசிலா மணியே. (௩)

---

(௨) அமைந்து கடந்திடாத இயன்றயாக்கையெனக் கூட் டுக. இத்திறயாக்கையாதிய வுடையராய்த் தோழமைபூண்ட நம்பியாரூரர் முதலியோர் விரும்பியவாறுசெய்யத் தேவரீரே வலிந்துசெல்லுங்காலத்தும் அவர் அவ்வரியயாக்கையையும் வெறுத்துத் தேவரீரையேநண்ண; யான் இவ்விழிவுடல் நீக்கத் திற்கு அழிவேன் இங்ஙனமாயின் எங்ஙனமுய்வேன் என்பது.

(௩) ஐம்புலன் - ஈண்டு ஐம்பொறிகள்.

நீலங்கடந் தவன்முன் னறுமலர் சாத்த நிகரிலம் மூர்த்தி முன் சந்து, நினக்கணி வுறவாட் டாயர்முன் னிருந்து நிவேத னம் புரிந்திட வன்று,—நலங்கிளர் கலையர் கலியர்முன் றூப நல்விளக் களிப்பநின் றன்னை, ஞானசம் பந்தப் பிள்ளைமுன் பாட நாணிலேன் பூசனை புரிவேன், — விலங்கினுங் கடையர் வளர்த்தசெந் தீயின் விரைந்தெழும் வாள்வரி வேங்கை, விடுப் பவங் கதுவந் தெதிர்ந்திட விகழ்ந்து விடாததன் றோலுரித் திருள்கொண், — டிலங்கொளி யிரவி யனையமெய்ப் படுத்த விறைவனே யநிட்டநின் றகற்றி, யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (ச)

மூக்கிடை யிரண்டு விழிகளே றுதன்முன் முடங்குகைக் கோலொரு காலா, முன்னநின் றிருவாய் மலர்ந்தருள் செய்த முதிர்கலைப் பொருள்படித் தவராய்க்,— கார்க்கடன் முகட்டி னிரவிவந் தெழுமுன் கடிதுசென் றணிமலர் கொய்துன், கழற் கிடார் பிறப்பி னுய்ப்பிறப் பினிது கற்றவ ரிகழ்ந்திடா மையி னு,—ஞெக்கற நோக்கு முருவமே நாவா னுகர்ந்திடா வினி யபே ரமுதே, நுதல்விழிக் கனியே கறைமிடற் றரசே நுவ லரு மாயையிற் பிறவா, — யாக்கைய திடைய வருட்பெருங் கடலே யெழுந்தொடுங் காதவான் சுடரே, யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (ரு)

திருக்குறு மழுக்கா றவாவொடு வெகுளி செற்றமா கியமன வழுக்கைத், தியானமென் புனலாற் பொய்புறங் கூற நீச்சொ

---

(ச) உலகையளந்த திருமாலாதியர் நறுமலர்சாத்தலாதிய ஒவ்வொருதொண்டையே மேற்கொண்டொழுகாநிற்க ; அவர் முன் நாணமின்றி அத்தொண்டனைத்தும் ஒருங் குடையதாகிய உமதுபூசையைச் செய்கின்றேன் எனதறியாமை என்னே! என்பது. இறைவரையழிப்பான் யாகமியற்றிப் புலியாதியவிடுத் தமைபற்றித் தாருகவனமுனிவரை விலங்கினுங்கடையரென்றார்.

(ரு) மூக்கிடைவிழிகளேறல் - காட்சிமழுங்கக் கண்சுருங்கல்.

லென் இன்றவா யழுக்கை,—யருட்கிளர் நினது துதியெனும்
புனலா லவத்தொழி லென்னுமெய் யழுக்கை, யருச்சனை யெ
ன்னும் புனலினாற் கழுவா வசுத்தனே னுய்யுநா ளுளதோ,—
விருப்பொடு வெறுப்பிங் கிலாதவ னென்ன வெண்மதி யோடு
வெண் டலையும், விரைவழி புகுந்து வண்டினம் பசுந்தேன்
விருந்துணுங் கொன்றைமென் மலரோ,— டெருக்கையு மணி
ந்து மின்னொளி கடந்த வீர்ஞ்சடைப் பாந்தணு னுடையா, யிட்
டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. ( )

சிவமுட னமூர்த்தி மூர்த்திகர்த் திருவஞ் செயன்மலி கரும
மென் றருநூல், செப்புதத் துவமுஞ் சதாசிவ னீசன் றிகழ்
தரு பிரமனீ சுரனே,—டுவமையி லீசா னப்பெய ரவனென்
றுரைத்திடு மூர்த்திக டாமு, முற்றவீ சான முதற்பிர பாவ
முடையநின் றன்னையென் றுணர்வேன்,—புவிமுத லனைத்து
மாக்குத லளித்தல் போக்குத லுயிர்வினை யருத்தல், புதிதுறச்
செம்பிற் களிம்பென வறிவைப் புணர்மல மகற்றுத லென்னு,
—மிவைபல வியைந்தும் விகாரமொன் றின்றி யிரவிபோ
லின்றகா ரணனே, யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு மீச
னே மாசிலா மணியே. (௭)

தான்பெறு மழலை மொழிமகன் றன்னைத் தன்கையா லுளங்
களித் தரிந்து, சமைத்துல கறிய விடுபெருந் தொண்டன்
றனைச்சிறுத் தொண்டனென் றவன்சே, — யூன்பெறு நீயே
யுரைத்தனை யென்று முரிமையோர் சற்றுமி லாதே, னுன்றி
ருத் தொண்ட னென்றிருப் பதனுக் குன்னுதல் பெரும்பிழை

---

(௭) சிவசாதாக்கியமுதலிய ஐந்துசாதாக்கிய தத்துவங்களை
யும் சதாசிவமூர்த்திமுதலிய ஐந்து தத்துவமூர்த்திகளையும்
முறையே உற்றன ஈசானம் சத்தியோசாதம் வாமதேவம்
அகோரம் தற்புருஷமென்னும் முகங்களாகிய பிரபாவங்கள்
எனக் கொள்க.

யன்றே,—தேன்பெறு நளின மலர்களா யிரத்தோர் செழும லர் குறைபட விரைந்து, செங்கணன் றிடந்து குறையற நிரப்பித் திருமறைச் சிலம்படிக் கணியா,—யான்பெறு நிதியே யென்றுல களந்தோ னேத்திநின் றிறைஞ்சுறு மமுதே, யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே.()

நின்புகழ் பாடும் பாணனார் தமக்கு நிதிதரச் சேரலன் றனக்கு, நீமுன முடங்க லொன்றளித் ததுபோ னிகரிலா வசவநாயன்ற,— னன்பினி லொருநா ருயிரங் கூறிட் டடுத்தகூற் றினிலொரு கூறிங், களிப்பதற் குனது திருமுக மருளா லடியனேற் களிக்குநா ளுளதோ,— பொன்புரை கடுக்கை மலர்ந்த செம் பவளப் புரிசடைப் பேரருட் குன்றே, புணர்முலைக் கயற்கட் பிறைநுதற் கனிவாய்ப் பொற்றொடி யிடத்துவா ழமுதே, —யென்பும்வெண் டலையு மணிந்துநான் புனித னென்றுமென் றிருந்திடு பவனே, யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (கூ)

வங்கையர் முத்த சங்கையர் சென்ன வசவண ரசகணர் வீர, மாச்சையர் பிப்ப பாச்சையர் வள்ள மல்லையர் கல்லைய ரெங்கள்,—சங்கண வசவ ராசையர் சேட தாசையர் சங்கர தாசர், சவுண்டைய ரென்றிங் கிவரடிக் கேவ றலையினுற் செய்யுநா ளுளதோ,—பங்கய மலரோ டரிவிழி பரித்த பதமலர் சிவப்பவே னெடுங்கட், பரவைதன் மனைக்கட் சுந்தர னேவும் பணியெலா முனிவற வியற்றி,—யெங்கணும் விளங்க நம்பியாரூர னேவல னெனப்படு மிறையே, யிட்டநன் குதவி யென் கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (கo)

நெடுங்கழிநெடில் முற்றிற்று.

---

(கo)வங்கையராதியர்சரித்திரங்களை வசவபுராணத்துட்காண்க.

# குறுங்கழிநெடில்.

## எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

பொன்செய்வா ணிகர்போ லெவ்வழி யானும் புண்ணிய மீட்டினு மறிஞர், கொன்செய்பா தகமே புரிந்தன னின்றுள் குறுகுவ தென்றென விரங்க, முன்செய்தீ வினையோ கனவினு மறமே மொழிகிலேன் களித்திருக் கின்றே, னென்செய்கோ மறலிக் கென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (க)

மென்னிழற் றருவை யடைபவர் தம்மை விடாநிழல் விட்டிடு மாபோ, னின்னடிக் கமல மடைந்திடிற் றொடர்ந்து நீங்கலா வினையுநீங் குறுமே, கன்னலிற் கனியிற் சுவைதரு மமுதே கண்மணி யேயருட் கடலே, யென்னுயிர்த் துணையே யென்கரந் திருக்கு மீசனே மாசிலா மணியே. (உ)

மூந்திரு வினையுந் தமவென விருப்பின் முற்றவற் றின்பயன் றருவாய், வந்தவை நினவென் றிருப்பினங் கவற்றை மாற்றிவீ டுறவருள் குவையே, நிந்தையி லென்னெஞ் சுனதுநெஞ் சென்மெய் நினதுமெய் யென்றனிந் தியநின், னிந்திய மெனக்கொண் டென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (ங)

கண்ணுடைக் குறையாற் சுடர்பல வாகிக் காட்டல்போற் காரண முதலாப், பண்ணுடற் றிறஞ்சே ரொன்றிருக் கதனாற் பலவுரு வாயினை யொருநீ, பெண்ணுருப் படைத்த பேரரு ளிடப்பால் பெற்றிட வுகந்தளித் தவனே, யெண்ணிடைப் படாம லென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (ச)

---

(க) பொன்செய்வாணிகர் — பொன்வினைபுரியும் வாணிகர். (தட்டார்) பொன் ஈட்டும் வணிகருமாம். என்செய்கு - யாது செய்வேனென்னும் தன்மையொருமை வினைமுற்று. ஓ - வினாப் பொருட்டு. (உ) விட்டிடுமாறு - கடைக்குறைந்தது. ஆறு - தன்மை. (ங) தமவென—தம்முடையனவென.

பிறவிமா மிடியன் முனெதிர் கண்ட பெறற்கரி தாயவைப் பென்ன, வறிவிலே னயன்மாற் கரியநின் றன்னை யம்மவோ வெளிதுகண் ணுற்றேன், றுறவினோ ருள்ளத் தெழுந்தொளி பரப்பித் தொல்லிருள் கடியுமெய்ச் சுடரே, யிறைவிகூற் றுடையா யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (ரு)

நினக்குறு கூறு மென்மன மதனை நிறைவளைத் தளிர்க்கை நெட் டிலைவேற், சினக்குறு மலர்க்கட் பேதையர் கொளாமற் செறிந்துநீ யேகவர்ந் தருள்வாய், புனக்குற மகட்கு மயல்கொடு திரிந்த பொறிமயிற் குமரனைப் பயந்தோ, யெனக்குறு துணையா யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (சு)

அன்பினுக் கன்றி நான்புனை மலருக் கருளுவை யலைமலர்க் கருளின், முன்பெடுத் தெறிந்த சாக்கியன் கல்லின் முருகலர் மிகவுமின் றுதோ, துன்பமுற் றிடுசிற் றின்பவெவ் விடயந் துறந்துளோர் மனத்தெழு தருபே, ரின்பாற் கடலே யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (எ)

ஆடுற வடியேன் புதுக்குடந் தருநீ ரன்பன்வாய்ப் புனலுனக் காமோ, கூடையின் மலர்பித் தையிற்றரு மலரோ கூறு மென் கவியவன் மொழியோ, நாடரு மொருநீ யிறையெனும் வழக்கை ஞானசம் பந்தனாற் றிட்ட, வேடுரை செய்ய வென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (அ)

மெய்யுறு பிணிக்கு விலக்குவ வொழித்து விதித்தன கொள்ளுவன் பிறவி, மையுறு பிணிக்கு மவ்வகை செயாமல் வருத்து

---

(சு) குருபணிக்கு உடலும், சங்கமபூசைக்குப் பொருளும், சிவத்தியானத்திற்கு மனமும், உரியனவாகப்புரிதல்வேண்டுமென்னும் நூற்றுணிபுபற்றி நினக்குறுகூறும் மனமென்றார். இதனை நிரஞ்சனமாலை (கஎ) வது செய்யுளினும் உணர்க.

(எ) மலர்க்கருள்வதாயின் என்மலர் கல்லினுந்தீதோ என்பது.

(அ) தருநீர் உனக்கு வாய்ப்புனலாமோ என இயையும்.

மந் நோயிடைப் படுவேன், பெய்யுறு வளைக்கைத் திருநுத லுமையாள் பெருவிழிக் கணொடு விடாம, லெய்யுறு முரத் தோ யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (கூ)

சரிப்பினு மொருபா லிருப்பினு முறக்கச் சார்வினும் விழிப் பினு மொருசொல், லுரைப்பினும் போக நுகர்வினு மாவி யொழிவினு நின்னையான் மறவேன், விருப்புறு மலரும் விரை யுமே போல விம்மியெங் கணுமுறு பொருளா, யிருப்பினு மரி யோ யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (கO)

குறுங்கழிநெடில் முற்றிற்று.

---

# நிரஞ்சனமாலை.

## கட்டளைக்கலித்துறை.

நிரஞ்சன சூனிய நிட்கள மாகியந் நிட்களத்தின்
வருஞ்சிவ சித்துச்சின் னுதவிச் சுக்கலை மன்னியொன்று
யருஞ்சுட ராயக ராதிப் பிரணவ மாகிநின்று
தருஞ்சகம் யாவுமென் கையா லயத்திற் றனிமுதலே. (க)

உருவாகி முத்தனு விற்கிரி யாதிகள் கொண்டொருமூன்
றருவாய் மலமொழித் தாவிகண் மூவங்க மாவருளி
யொருவாது தான்முதன் முப்பொரு ளாகி யுவந்துநிற்குந்
திருவாரு மென்கைத் தவிசிடை மேவுஞ் சிவலிங்கமே. (உ)

என்னை யறித னினையறி கின்ற வியல்பதென்று
தன்னை யெனைவிட் டறிவான் றொடர்த லொருவனிழ
றன்னை யடியின் மிதிப்பான் றொடருர் தகைமைத்தன்றோ
பொன்னை நிகர்செஞ் சடைக்கற்றை யென்கைப் புராந்தகனே.

தன்பொரு ளென்ப நினைப்பிறர் தம்பொரு டாவரமா
மென்ப னறிந்து முயிர்க்கே ளிருப்பவு மேதிலர்மெய்ப்
புன்புணர் வெஃகு மடமாதி னின்னிற் புறந்திரியு
மன்பறு மென்பவம் போமேயென் னங்கை யமர்ந்தவனே. ()

அங்கையி னெல்லி யெனவந்தெ னங்கை யமர்ந்தவிளந்
திங்களங் கண்ணி நினையன்றிப் போய்ப்பிற தெய்வந்தொழல்
கொங்கவிழ் பூந்துணர்க் கற்பக நீழற் குடிமுனிந்து
பொங்கெரி வெந்நிர யத்தா டிருப்பப் பொருந்துவதே. (௫)

சித்து நிரஞ்சனத் துச்சூனி யத்துச் செயலுளாதீர்
சித்த வநாதி சரணன் சரணனந் நிட்களத்தே
யத்தனி மாலிங்க மாதியி ஞனயிக் காதிகளாய்
மெய்த்த வுனையென்று நீங்கேனெ னங்கை விடாதவனே. (௬)

கண்ணி லிரவி செவியிற் றிசைநின் கருத்தின்மதி
யொண்ணுத லிற்கனல் வானுத ரத்தி லுயிர்ப்பில்வளி
வண்ண வடியிற் புவியிந் திரனயன் மால்புயத்தி
லண்ணல் வதனத் தரன்றேன்று மென்கை யமர்ந்தவனே. ()

காயங் கரணநற் பாவ மறிபவன் காணறிவு
ஞேயங்க ளாகி முதனடு வீறி னினக்கயலே
யாயிங் கொருபொரு ளர்ப்பிப்ப லென்ப தவிச்சையன்றோ
பாயுஞ் சினவிடை யொன்றூரு மென்கைப் பரஞ்சுடரே. (௮)

சத்தங்க லிங்கங்க ளாயே நிகழ்ந்தது சத்திபத்தி
சித்திங் கடைந்தது கைமுக வர்ப்பித சேடங்களாய்
மெத்தன் றிலங்குநின் ஞானந்த மேயென் விழிகளிப்பக்
கைத்தங்கு செம்பொரு ளேயருள் காட்டுங் கறைக்கண்டனே.

வான்குறித் தெய்யுங் கணைநுதிக் கேகிற்கும் வானெனவே
யான்குறித் தெய்தப் புகுமறி வின்க ணிருத்திகண்டாய்

கூன்குறித் திங்கட் சடையாய் மகரக் குழைதடவு
மான்குறிக் குங்க ணுமைபங்க னேயென்னைம் மாணிக்கமே. ()

பிரமமுந் தானு மயலென் றருச்சிக்கும் பேதநிலை
தருமம் மயலற நானாகி நின்றனை தான்சிவமென்
றொருமை வினையி லபேதம் புகாம லருச்சிக்குமா
றிருமை வடிவுகொண் டுற்றாயெ னங்கை யிறையவனே. (௧௧)

கோலந் தருமடி நாப்பண் விருத்தநற் கோமுகமா
ஞாலங் கருதருங் கோளகந் தம்மி னயர்ந்தடியேன்
சீலங் கொளுமரு ளாசார மாதி திகழ்ந்துநிற்கு
மூலங் கரணங் கலந்தங்கை மேவிய முக்கண்ணனே. (௧௨)

மண்ணும் புனலுஞ் சுடுசெழுந் தீயும் வளியுமகல்
விண்ணும் படைத்து விளையாடிக் காக விழியிரண்டு
நண்ணுங் கருமணி யொன்றென வேபவ நாசமுறக்
கண்ணுங் கருத்துங் கலந்துநின் றாயென்கைக் கண்ணுதலே. ()

நாக மெனவும்பின் கோக மெனவுமெய்ஞ் ஞானத்தினாற்
சோக மெனவுஞ் சொலுமறி யாமை தொலைத்தொருநீ
யாக முழுது நிறைந்துநின் றாய்நல் லருட்கடலே
பாக மொருபெண் குடியாகு மென்கைப் பரஞ்சுடரே. (௧௪)

ஒன்றிரண் டாயவை பற்பல வாகி யுதித்தமுறை
சென்றிரண் டாகிப்பின் னொன்றாகி நிற்குஞ் சிவமொடங்க
மென்றிரண் டாக வுரைப்பார் நினதிய லெய்திலர்காண்
மின்றிரண் டாலன்ன மேனிய னேயென்கை வித்தகனே. ()

உறங்குது மென்றுறங் காநிற் பவரிலை யோங்கொளியாய்ப்
பிறங்கு முனையடைந் தோமென் றிருப்பது பேதைமைகா
ணிறங்குணி போல வெனைக்கொண்டு நின்ற நிலையினின்று
புறம்பக மொன்று மிலாதென்கை மேவும் புராந்தகனே. (௧௬)

தூருவிற் குதவு முடல்சரத் திற்குக் கொடுத்தலுறு
திருவிற் றிசமு நினக்கே தருமனஞ் செயரிக்கட்
பொருவிற் புருவ மடமாதர் தம்மிடைப் போக்குறுமென்
கருவிற் கொழிவுள தோகர பீடத்தெங் கண்ணுதலே. (கஎ)

தூயிலினும் போகினு நிற்கினும் வீழினுஞ் சொல்லினுமொன்
றயிலினுங் காணினுங் கேட்பினும் வாழினு மல்லலொடு
பயிலினுஞ் சோரினுந் தேறினு நீக்கினும் பற்றினும்பொய்
குயிலினுஞ் சோம்பினு நிற்கட வேனென்கைக் கொற்றவனே.

ஓடுந் தனமும் புகழும் பழியு முயர்விழிவுங்
கேடுந் திருவு மமுதமும் புற்கையுங் கேள்பகையும்
வீடுங் குடிலு மகளிரு மன்னையும் வேறறவே
நாடுங் கருத்து வருமோ வெனக்கென்கைந் நாயகமே. (கக)

பாடு மவனுமொன் பாட்டுமப் பாடப் படுபவனு
நாடு மளவினி னீயன்றி வேறிலை நான்முகன்மா
றேடு மருமருந் தேயமு தேயிளந் திங்கண்முகிழ்
சூடு மணிவிளக் கேகர பீடத்திற் றூயவனே. (உ0)

இல்லாள் புதல்வ ரனைதந்தை பொன்மண் ணிடைவிழைவு
செல்லா மருளு மயறீர்ந்து நின்கழல் சேர்ந்துனக்கே
யெல்லா முதவுநற் சித்தத் துறைகுவை யென்கையுள்ளாய்
நல்லார் புகழ்தரு மாசார லிங்கமென் னுமமுற்றே. (உக)

பழியாம் பிறர்தம் பொருண்மனை வேட்கை பரதெய்வமோ
டொழியா வருடரு மட்டா வரண முவந்துகொண்டே
யழியா துயருநற் புத்தி யெனுங்கை யமர்வைகண்டாய்
மொழியா வருங்குரு லிங்கமென் றேயென்கை முன்னவனே.

விடயங் களினண்ணி யானென தென்னு மிகையொருவி
யடையும் புலனினக் காக்குந் தவிரகங் காரப்பெய
ருடையங் கரமிசை நற்சிவ லிங்கமென் றற்றனைகாண்
புடையம் பிகையொ டமர்வாயெ னங்கைப் புராந்தகனே. ()

நில்லா தியங்கும் வளியொடு கூடி நிலையழிந்தே
புல்லா விடயத் தலமர னீங்குபு பொய்யினெறி [ளாய்
செல்லா தொளிர்நன் மனத்தே யிருத்தியென் செங்கையுள்
கல்லா ரறிவருஞ் சங்கம நாமங் கடைப்பிடித்தே. (உச)

உடம்பு சதிபதி தானாய் விடயங்க ளுண்டுழலா
தடங்கு சதியொரு தானாகி நீபதி யாகவுனைத்
தொடர்ந்து றுகருநன் ஞானக் கரத்திடை தோன்றுவைமால்
கடந்து வருபிர சாதமென் றேயென்கைக் கண்ணுதலே. (உரு)

யானா ரடிமை சிவனே யிறையென் றிருப்பதுபோய்
நீநா னெனப்படும் பேத மிலாமை நெறியுதவு
மானா துயர்ந்தசற் பாவத்து மாலிங்க மாகிநின்றாய்
வானா டரியவ னேகர பீடத்து மாணிக்கமே. (உசு)

உலகிய றன்னை யொருவாது பற்று முளத்தொளியா
யிலகிய நின்னைத் தெரிப்ப தொருவற் கெளிதுகொலோ
சிலைகவர் கையில் விளங்காய் பிடித்தல் செயுமவர்யார்
விலகுதிண் டோளணி கொண்டவ னேயென்கை வித்தகனே.

ஆனந்த வாரிதி யாகிய நீகை யமர்ந்திருப்ப
நானந்து தீவிட யந்தேடிச் சென்றுண்டு நைந்தழிதல்
வானந் தமுதங் கரத்தே யிருப்பதை மாற்றியருந்
தீநஞ் சருந்துத லன்றோ நிரஞ்சன சின்மயனே. (உஅ)

உருவஞ் சுவைநிறை வாகிய மூன்று முவந்துகொண்டு
மருவங்க முள்ள முருவக லாதுள்ள வாறுநின்றா
யருவன் றுருவன் றருவுரு வன்றி யறிவுருவாய்க்
கருவன் றுலகம் படைத்தாடு மென்கைக் கறைக்கண்டனே. ()

---

(உகூ) கருவன்று - கருவன்றி. கரு - வித்து. * "விச்சதன்றியே விளைவுசெய்குவாய்" என்பதனானும் அறிக. * திருவாசகம் திருச்சதகம். கருவென்று என்பதும்பாடம்.

விள்ளேன் சிறிய ரினம்பெரி யோரை விரும்பியென்று
நள்ளேன் பிறர்மனைப் போக்கொழி யேன்மெய்ந் நடுநடுங்க
வுள்ளேன் றிருவடி நீழலி லென்னெஞ் சுருகினையேன் [வனே.
றுள்ளேன் றொழும்புசெ யேனென்செய் கேனென்கைத் தூய
அழியும் பொருள்கொடுத் தேசங் கமத்திற் கழிவில்பொருள்
பழியும் பவமு மிலாதெய்த லாயும் பயனிலவாய்க்
கழியும் படிநெடு நாணீத் தமுதங் கமருகுத்தேற்
றொழியும் பவமுள தோகர பீடத் துறைபவனே. (ருக)

நிரஞ்சனமாலை முற்றிற்று.

---

# கைத்தலமாலை.

## ஒருவிகற்பவேதுகைக் கலிநிலைத்துறை.

முன்ன மாலய னிந்திர னமரர்கண் முனிவர்
பன்னு மாரணம் போற்றுதற் கரியநம் பரமன்
மின்னு லாவிய சடாடவிக் கடவுள்வீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (க)

அன்ன மாயும்வெண் பிறைமருப் பேனமென் றுயு
முன்ன நான்முக ஞானன் றேடரு முதல்வன்
பின்னு வார்சடைப் பெருந்தகை பீடமாக் கோடற்
கென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (உ)

தன்னை மேவிவந் தனைபுரி பவன்செய றடுப்பா
னுன்னி மேல்வரும் வெந்திறற் கூற்றினை யுதைத்த
மன்னு மாலயற் கரியவன் வந்துவீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (ங)

தன்னை நேர்வட காசிதென் கயிலைகே தார
மன்ன மார்வய வம்பல நமன்றமர் வாராமற்
கன்னன் மாமதற் றெறும்விழிக் கடவுள்வீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (ச)

கன்ன லாரமு தினுஞ்சுவை தருவதாய்க் காண்பா
னுன்னு மாலயற் கரியதா மொருமலை யுச்சி
மன்னு மோர்பவப் பிணிமருந் தெளிதுவந் திருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (ரு)

அன்னை யாகியின் னுயிர்க்குயி ராமரு ளாளன்
பொன்னு மாரமு மணியுமா ரமுதமும் போல்வான்
றன்னை நாடொறுங் கண்டுகண் களிப்பதாச் சார்தற்
கென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (சு)

அன்ன மூர்பவன் முதலியோ ரபயமென் றடைய
முன்ன மாலமுண் டவர்துயர் களைந்தருண் முதல்வன்
மின்னு மாமழு வலமுடை வீரன்வீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (எ)

பன்னு மாமறை தமிழினுற் பாடுநம் பிக்குப்
பொன்னு மாடையு மணிகளு மூர்தியும் பொருளு
மின்னு மீபவ னருளினன் மேவிவீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (அ)

பின்னும் வார்திரைக் கடலின்வீழ்ந் தமிழ்கையிற் பிடிப்ப
முன்ன மோர்புணை யகப்படு முறைமைபோற் பிறப்பி
னின்னல் கூர்பொழு தெம்பிரான் வந்துவீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (கூ)

தன்னை யோர்பொழு திறைஞ்சுவான் கருதியித் தனைமேன்
மன்னு மாலயம் யாண்டுள தெனவல மராமற்
பொன்ன வாமலர்ச் சடையுடைப் புனிதன்வீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (கo)

கைத்தலமாலை முற்றிற்று.

---

(ரு) கன்னல்வானமு தென்பதும் பாடம்.
(சு) அன்னையாதியன், கண்களிப்பவே, என்பதும் பாடம்.

# சிவநாம மகிமை.

### கலிவிருத்தம்.

வேத மாகமம் வேறும் பலப்பல
வோதி னாலு முளந்தடு மாறன்மின்
சோதி காணிருள் போலத் தொலைந்திடுந்
தீதெ லாமுஞ் சிவசிவ வென்மினே. (௧)

புல்ல ராயினும் போதக ராயினுஞ்
சொல்வ ராயிற் சுருதி விதித்திடு
நல்ல வாகு நவையென் றகற்றிய
செல்ல நீருஞ் சிவசிவ வென்மினே. (௨)

நாக்கி னானு நயனங்க ளானுமிவ்
வாக்கை யானு மருஞ்செவி யானுநம்
மூக்கி னானு முயங்கிய தீவினை
தீர்க்க லாகுஞ் சிவசிவ வென்மினே. (௩)

சாந்தி ராயண மாதி தவத்தினான்
வாய்ந்த மேனி வருத்த விறந்திடாப்
போந்த பாதக மேனும் பொருக்கெனத்
தீந்து போகுஞ் சிவசிவ வென்மினே. (௪)

வில்லி தென்ன விளங்குந் திருநுதல்
வல்லி பங்கன் மலரடி காணிய
கல்வி நல்குங் கருத்து மகிழ்வுறுஞ்
செல்வ நல்குஞ் சிவசிவ வென்மினே. (௫)

தீய நாளொடு கோளின் செயிர்தபு
நோய கன்றிடு நூறெனக் கூறிய
வாயுள் பல்கு மறம்வளர்ந் தோங்குறுந்
தீய நீருஞ் சிவசிவ வென்மினே. (௬)

---

(௪) இறந்திடாத என்பது ஈறுகுறைந்தது. (௫-௬) காணிய கூறிய என்பன செய்யிய வென்னும் வினையெச்சம்.

வருந்தி யாற்றி வளர்த்த கதிர்த்தலை
பொருந்து வான்பயிர் போற்றுநர் போலவே
விரிந்த வேணியில் வெண்மதி சூடிபின்
றிரிந்து காப்பன் சிவசிவ வென்மினே. (எ)

மூந்தை யோர்சொன் மொழிந்து சிவனென
நிந்தை தானச் சிவனை நிகழ்த்தினும்
வந்த தீவினை மாற்றுவ னாதலாற்
சிந்தை யோடு சிவசிவ வென்மினே. (அ)

நீச ரேனும்வா னீசர் நிகழ்த்தில்வா
னீச ரேனுஞ் சிவசிவ வென்கிலார்
நீச ரேயென் றியம்புறு நின்றுப
தேச நூல்கள் சிவசிவ வென்மினே. (௯)

எண்ணி நெஞ்சிற் சிவசிவ வென்பவர்
வண்ண மென்பதங் கிட்டி வணங்கவு
முண்ண டுங்குவ னெண்டிறற் கூற்றுவன்
றிண்ண மீது சிவசிவ வென்மினே. (௧௦)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இழிவுறுபுன் கருமநெறி யினனெனினுங் கொலைவேட னெனினும் பொல்லாப், பழிமருவு பதகனெனி னும்பதித னெனினுமிகப் பகரா நின்ற, மொழிகளுண்மூற் றவசனுய்ச் சிவசிவவென் றொருமுறைதான் மொழியி லன்னோன், செழியநறு மலரடியின் றுகளன்றே வெங்கள்குல தெய்வ மென்ப. (௧௧)

சிவநாமமகிமை முற்றிற்று.

---

திருச்சிற்றம்பலம்.

---

சிவப்பிரகாசசுவாமிகள் திருவடிவாழ்க.

---

(எ) வெண்மதிசூடி - வினைக்குறிப்புப் பெயர்.